# DEPOSITION OF WITNESS

(Chapter XX III Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1

RAMANATHAPURAM

CASE NO: CC 513/2022

Deposition of witness for prosecution –PW– 3

| | | |
|---|---|---|
| Name | : | பவித்ரா |
| Fathers Name | : | பாலுச்சாமி |
| Village | : | பனைக்குளம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | 12ம் வகுப்பு |
| Religion | : | |
| Age | : | 21 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 06th day of November 2023.

(எதிரி ஆஜர் இல்லை. 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டுள்ளது.)

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து 12ம் வகுப்பு படித்து முடித்துள்ளேன். அ.சா.1 எனது அம்மா, அ.சா.2 எனது அக்கா. 13.09.2020ம் தேதி இரவு நாங்கள் எல்லாரும் சாப்பிட்டு துாங்கிவிட்டோம். எனது அப்பா இரவு 11 மணி போல் கடலுக்கு சென்றுவிட்டார். அன்று இரவு 1 மணி போல சத்தம் கேட்டது. ஓடிப்போய் என் அம்மா பார்த்தார். அப்போது ஒரு நபர் ஓடிக்கொண்டிருந்தார். என் அம்மா சத்தம் போட்டவுடன் கோவிந்தராஜ் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் ஓடிவந்தார்கள். அப்போது எனது அம்மாவின் கழுத்தில் 4கிராம் தாலி மற்றும் 4கிராம் காசையும் காணவில்லை. மறுநாள் 2 மணிக்கு என் அம்மா புகார் கொடுத்தார். எதிரியை காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக பேப்பரை கொடுத்தால் மனப்பாடமாக படித்து என்னால் சொல்ல முடியும் என்றால் சரிதான். தேதி, நேரம் சம்பவம் ஆகியவை குறித்து எனக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரிக்கு சுமார் எத்தனை வயது இருக்கும் என்றால் 42 முதல் 45 வயது இருக்கும். எதிரியின் தோற்றம் ஏதேனும் அடையாளம் சொல்லத் தெரியுமா என்றால் இல்லை. எனக்கு வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது காவல் துறையினர் கூறியதன் அடிப்படையில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகை காணாமல் போனது மீண்டும் கிடைக்க வேண்டும் என்பதற்காக எனது அம்மா பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: CC 513/2022
Deposition of witness for prosecution –PW– 2

| | | |
|---|---|---|
| Name | : | பவானி |
| Fathers Name | : | பாலுச்சாமி |
| Village | : | பனைக்குளம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | மீன் பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 23 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 06th day of November 2023.

(எதிரி ஆஜர் இல்லை. 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டுள்ளது.)

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறோம். அ.சா.1 எனது அம்மா. 14.09.2020 ம் தேதி அதற்கு முதல் நாள் என் தந்தை இரவு 11 மணி கோல் கடல் தொழிலுக்கு சென்றுவிட்டார். எனது அப்பா கடலுக்கு செல்லும்போது வெளிக்கேட்டை தாழ்ப்பாள் போட்டுவிட்டு சென்றுவிட்டார். நாங்கள் அப்போது வீட்டுக்குள் படுத்து இருந்தோம். 14 ம் தேதி இரவு 1 மணி போல் சத்தம் கேட்டது என் அம்மா வெளியில் சென்று பார்த்தார் அப்போது ஒரு நபர் ஓடினார். அப்போது என் அம்மா அவர் கழுத்தில் பார்த்த போது தாலியை காணவில்லை. காசு 4 கிராம், தாலி 4 கிராம் ஆகியவை காணவில்லை. அதன்பிறகு அருகில் உள்ளவர்கள் எல்லோரும் தேடிபார்த்தோம். அதன்பிறகு 14 ம் தேதி பகல் 2 மணி போல் எனது அப்பா வந்தவுடம் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த புகாரை யார் எழுதினார் என்றால் எனது அம்மா படிக்காத காரணத்தினால் காவல்துறையினர் எழுதி படித்து காண்பித்தனர் அதில் கையெழுத்து போட்டோம். இந்த சம்பவம் நடக்கும் போது எனக்கு திருமணம் ஆனதா என்றால் திருமணம் ஆனது. திருமண ஆன தேதியை சொல்ல முடியுமா என்றால் 04.03.2022 ஆகும். நகை காணாமல் போனது 14ம் தேதி இரவு 1 மணி என்றால் சரிதான். நாங்கள் புகார் கொடுத்து 13 மணி நேரம் கழித்து தான் என்றால் சரிதான். மேற்படி நேரத்தில் நாங்கள் நகையை தேடிக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். நான் வந்து பார்க்கும் போது யாரோ ஒரு நபர் ஓடினார் என்றால் சரிதான். அந்த நபர் பற்றிய விபரம் தெரியுமா என்றால் இல்லை. காவல் துறை காண்பித்தன் பேரில் தான் எதிரி நகையை திருடினார் என்பது தெரியும் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது யாரெல்லாம் காவல் நிலையம் சென்றோம் என்றால் நான், அப்பா, எனது அம்மா ஆகியோர் சென்றோம். நாங்கள் போகும் போது காவல் நிலையத்தில் யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் எங்கள் வழக்கு சம்பந்தமாக நாங்கள் மட்டும்தான் போயிருந்தோம். என்னிடம் ஏதேனும் கையெழுத்து வாங்கியிருந்தார்களா என்றால் இல்லை. நகை எதையும் யாரும் திருடவில்லை என்றும் அது காணாமல் போனதால் அது குறித்து காவல் துறையிடம் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அம்மா நகையை கட்டியாக தான் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் எந்த புகாரையும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: CC 513/2022
Deposition of witness for prosecution –PW– 1

| | | |
|---|---|---|
| Name | : | உலகம்மாள் |
| Husband Name | : | பாலுச்சாமி |
| Village | : | பனைக்குளம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | மீன் பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 06th day of November 2023.

(எதிரி ஆஜர் இல்லை. 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டுள்ளது.)

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். 13.09.2020ம் தேதி இரவு நாங்கள் சாப்பிட்டு விட்டு தூங்கிவிட்டோம் எனது கணவர் இரவு கடல் தொழிலுக்கு சென்று விட்டார். அடையாளம் தெரியாத ஒருவர் இரவு 1 மணிபோல் எனது செயினை அறுத்து கொண்டு ஓடினார். எழுந்து பார்த்த போது அவர் ஓடினார். நாங்கள் கத்தினோம் அவர் ஓடிவிட்டார். பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஓடிவந்தார்கள். அவரை தேடினோம் பிடிக்க முடியவில்லை. எதிரி அறுத்துக்கொண்டு ஓடிய எனது திருமாங்கல்யம் 4 கிராம், 4 காசு, தாலி 4 கிராம் மொத்தம் 1 பவுன் அதன் பிறகு மறுநாள் 2 மணி போல் தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்மனு அ.சா.ஆ1 ஆகும். அதன்பிறகு எதிரி திருடிய எனது நகையை கணம் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து நான் பெற்றுக்கொண்டேன். எதிரி நகையை கட்டியாக உருக்கிவிட்டார். நகைக்கான

புகைப்படம் (எண்ணம் 4 மற்றும் சிடியுடன் கூடியது) அ.சா.பொ.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த புகார் மனு என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவை யார் எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன். நான் எத்தனாவது படித்துள்ளேன் இரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது எழுத்திற்கும் கையெழுத்திற்கும் நிறைய வித்தியாசம் உள்ளதா என்றால் உள்ளது. அ.சா.ஆ.1 ஆவணமானது காவல் துறை எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். நகை தொலைந்ததாக கூறக்கூடிய காலம் என்பது 14ம் தேதி இரவு 1 மணிக்கு ஆகும். ஆனால் புகாரானது மாலை 2 மணி அளவில் கொடுத்தேன் என்றால் சரிதான். அதாவது 13 மணி நேரம் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கும் எனது ஊருக்கும் எவ்வளவு துாரம் இருக்குமென்றால் முக்கால் மணிநேரம் இருக்கும். எனது வீட்டை ஒட்டி நெருக்கமாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்னால் உள்ள கதவானது தகரக் கதவு என்றால் சரிதான். சாதாரணமாக தகரக்கதவை ஒரு நபர் திறந்தாலோ, இழுத்தாலோ சத்தம் கேட்கும் என்றால் சரிதான். நான் வந்து பார்க்கும் போது ஒரு நபர் இருந்தாரா என்றால் அவர் ஓடினார். நான் வந்து பார்க்கும் போது சத்தம் போட்டவுடன் யார் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் கோவிந்தராஜ், ராமகிருஷ்ணன் ஆகிய பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்தார்கள். காவல்துறை அதிகாரிகள் தான் மேற்படி எதிரி நகையை திருடினார் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். மேற்படி நகையை உருக்கி கட்டியாக தான் என்னிடம் காவல் துறையினர் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் எந்த நகையும் காணாமல் போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காணாமல் போன நகையை மீட்பதற்காக நான் தப்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த புகாரும் காவல் துறையிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.